## II. மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

1976ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் நிதிக்கணக்குகள் பின்னிணைப்பு IIIஇன் அட்டவணை 7இல் தரப்பட்டுள்ளன. 1975ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 1976 திசெம்பர் முடிவிலுள்ள முக்கிய மாற்றங்கள் பின்வருமாறு :

| | மாற்றம் (பத்து இலட்சம் ரூபாய்களில்) |
|---|---|
| மொத்தக் கேள்விப் பொறுப்புக்கள் ... ... | + 656.7 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் ... ... ... | + 516.8 |
| கேள்வி வைப்புக்கள் ... ... ... ... | + 133.3 |
| வெளிநாட்டிலிருந்து பெற்ற கடன்பாடுகள் ... | + 6.6 |
| பன்னாட்டு ஒதுக்கு ... ... ... ... ... | + 384.9 |
| உள்நாட்டுச் சொத்துக்கள்... ... ... ... | + 177.5 |

+ அதிகரிப்பு

இவ்வாண்டு இறுதியில் ஸ்டேர்லிங், இந்திய ரூபாய், ஐ. அ. டொலர் ஆகியவற்றிற்கான மத்திய வங்கியின் வீதங்கள் பின்வருமாறு அமைந்திருந்தன:

| | தொலைமாற்றல் கொள்வனவு | தொலைமாற்றல் விற்பனவு |
|---|---|---|
| ஸ்டேர்லிங் (100உக்கு) உடன்மாற்று | ரூ. 1,460 7/8 | ரூ. 1,462 3/8 |
| பின்மாற்று (ஆறு மாதங்கள் வரை) | உடன்மாற்றிற்கு மாதந்தோறும் ரூபாய் ஒன்றில் 21/32 கழிவு. | உடன்மாற்றிற்கு மாதந்தோறும் ரூபாய் ஒன்றில் 21/32 கழிவு |
| இந்திய ரூபாய்கள் (100உக்கு) உடன்மாற்று | ரூ. 99 11/32 | ரூ. 99 13/32 |
| பின்மாற்று (ஆறு மாதங்கள் வரை) | உடன்மாற்றிற்கு மாதந்தோறும் ரூபாய் ஒன்றில் 1/32 கழிவு. | உடன்மாற்றிற்கு மாதந்தோறும் ரூபாய் ஒன்றில் 1/32 மிகை மதிப்பு. |
| ஐ. அ. டொலர்கள் (100உக்கு) உடன்மாற்று | ரூ. 886.25 | ரூ. 886.50 |
| பின்மாற்று (மூன்று மாதங்கள்வரை) | ரூ. 886.25 | உடன்மாற்றுக்கு மாதந்தோறும் 50 சதம் மிகை மதிப்பு.* |

மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் பின்னிணைப்பு IIIஇன் அட்டவணை 8இல் தரப்பட்டுள்ளன.

* மூன்று மாதங்கள் கடந்த நிலையில் ஆறு மாதங்கட்கும் மத்திய வங்கிக்கு குறித்த விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

அரசின் பிணைகளையும் வர்த்தக உற்பத்திக் கடன்கள் என்பவற்றிற்குச் சலுகைக்கால வாக்குறுதிச் சான்றிதழ்களையும் வைத்துப் பெறப்பட்ட முற்பணங்கள்மீதான மத்திய வங்கியின் வட்டிவீதம் ஆண்டொன்றிற்கு $6\frac{1}{2}$ சதவீதமாக எவ்வித மாற்றமுமின்றி இருந்தது. உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் நெற்கொள்வனவிற்கும் உள்ளூரில் பயிரிடப்பட்ட வேளாண்மைப் பொருட்களின் கொள்வனவு, களஞ்சியப்படுத்தல் என்பனவற்றிற்கு நிதியிடுவதற்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்களின் பொருட்டு சலுகைக்கால வாக்குறுதிச் சான்றிதழ்களைப் பிணையாகக்கொண்டு வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட மத்திய வங்கியின் முற்பணங்களின்மீதான வட்டிவீதம் ஆண்டொன்றுக்கு 3 வீதமாக மாறாதிருந்தது. நெல், காய்கறி வகைகள் மற்றும் குறிக்கப்பட்ட பயிர்கள் என்பவற்றின் சலுகைக்காலச் சான்றிதழ்களைப் பிணையாகக்கொண்டு வர்த்தக வங்கிகள் மத்திய வங்கியிடம் பெறும் முற்பணங்களின் மீதான வட்டி தொடர்ந்தும் ஆண்டொன்றிற்கு $1\frac{1}{2}$ சதவீதமாக இருந்தது. இது இவ்வசதியைப் பயன்படுத்திக்கொள்ளும் வர்த்தக வங்கிகள் வாக்குறுதிச் சான்றிதழ் வரைவோரிடம் 8 சதவீதத்திற்குமேல் (குறித்த நாளில் பணம் திருப்பிக் கொடுக்கப்பட்டவிடத்து 3 சதவீதக் கழிவுக்குட்பட்டு) வட்டி அறவிடக்கூடாது என்ற அடிப்படையில் வழங்கப்பட்டது. திறைசேரி உண்டியல்களுக்கான மத்திய வங்கியின் கழிவுவீதம் இறுதியாக ஏற்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் கேள்விபத்திரத்தின் சராசரி வீதத்திலும் பார்க்க ஆண்டொன்றுக்கு $\frac{1}{8}$ சதவீதமாகத் தொடர்ந்திருந்தது.

**வெளிநாட்டு நாணயத்தாள்கள்:**

இலங்கையிற் தொழிற்படும் வர்த்தக வங்கிகளிடமிருந்து மத்திய வங்கி குறிப்பிட்ட வெளிநாட்டு நாணயத்தாள்களைக் குறிக்கப்பட்ட வீதங்களில் தொடர்ந்து கொள்வனவு செய்தும் விற்பனைசெய்தும் வந்தது.

**கொடுகடன் உத்தரவாதத்திட்டம்:**

1976இல நெல், காய்கறிகள் ஏனைய குறிக்கப்பட்ட பயிர்கள் என்பனவற்றின் உற்பத்தி, தேயிலை மீள்நடுகை, தேயிலைத் தொழிற்சாலை புதுப்பித்தல் ஆகியவற்றிற்கு வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களின் ரூ. 1,41,737,000 கொண்ட தொகைக்கு மத்திய வங்கி உத்தரவாதமளித்தது.

**நடுத்தர நீண்ட தவணைக் கொடுகடன்கள்:**

நடுத்தர நீண்டதவணைக் கொடுகடன் திட்டத்தின்கீழ் மத்திய வங்கியால் கொடுகடன் நிறுவனங்கட்கு வழங்கப்பட்ட மீள நிதியிடற் கடன்களின்மீதான வட்டிவீதங்கள் மாறாது பின்வருமாறு அமைந்திருந்தன:

அ வேளாண்மை அல்லது கைத்தொழில் ஊக்குவித்தல் அல்லது அபிவிருத்திக்கு ஆண்டிற்கு $6\frac{1}{2}$ சதவீதம்

ஆ. தேயிலைத் தொழிற்சாலைகளை புதுப்பிக்கவும், கட்டவும் அத்தகைய கடன்களின்மீது செலுத்தவேண்டிய வட்டியில் ஒரு பகுதியினைத் தேயிலைக் கட்டுப்பாட்டாளர் ஏற்குமிடத்து —

(i) உள்நாட்டுச் செலவுகளைப் பொறுத்து ஆண்டிற்கு 6 சதவீதமும்;
(ii) வெளிநாட்டுச் செலாவணிச் செலவுகளைப் பொறுத்து ஆண்டிற்கு 8 சதவீதமும்;

இ. வர்த்தகம், வணிகம் அல்லது வியாபாரம் என்பவற்றின் ஊக்குவித்தல் அல்லது அபிவிருத்திக்கு $7\frac{1}{2}$ சதவீதம்.

இவ்வாண்டுக் காலப்பகுதியில் கொடுகடன் நிறுவனங்கட்கு ரூ. 19,119.000 கொண்ட மொத்த மீளநிதியீட்டற் கடன்கள் வழங்கப்பட்டன.

**நாணய வெளியீடு :**

1976 இறுதியில் மொத்த நாணயச் சுற்றோட்டம் ரூ. 24,072 இலட்சமாக விளங்கியது. இது 1975ஆம் ஆண்டு இறுதியிற் காணப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில் ரூ. 5,168 இலட்சம்கொண்ட அதிகரிப்பைக் காட்டுகின்றது. நாணயத்தாள்களின் சுற்றோட்டத்தில் ரூ. 5,028 இலட்சங்கொண்ட அதிகரிப்பும், குத்திகளின் சுற்றோட்டத்தில் ரூ, 140 இலட்சம்கொண்ட அதிகரிப்பும் காணப்பட்டன.

1975 ஒகத்து மாதத்தில் கொழும்பில் நடாத்தப்பட்ட கூட்டுச்சேரா நாடுகளின் ஐந்தாவது உச்சி மாநாட்டின் நினைவாக ரூ. 5, ரூ. 2 ஆகிய இரண்டு வகை பெறுமதியான சிறப்பு நாணயக்குத்திகள் வெளியிடப்பட்டன.

ரூ. 5 நாணயக்குத்தி தூய நிக்கலால் அமைக்கப்பட்டு 10 சம்மான பக்கங்களையும் 1.293 அங்குல விட்டத்தையும் கொண்டிருக்க, ரூ. 2 நாணயக் குத்தி செம்பும் நிக்கலும் கலந்த உலோகத்தால் ஆனதாகவும் 7 சம வளைவுகளைக்கொண்ட பக்கங்களை உடையதாக 1.181 அங்குல விட்டத்தைக் கொண்டதாகவும் விளங்கியது. இந்த இரண்டு நாணயக்குத்திகளின் முகப்பிலும் பண்டாரநாயக்க நினைவு பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தின் சின்னம் காணப்படுகின்றது நாணயக்குத்தியின் இடப்புறத்தில் "නොබැඳුණු ජාතීන්ගේ සම්මේලනය" (கூட்டுச்சேரா நாடுகளின் மாநாடு) என சிங்களத்தில் பொறிக்கப்பட்டிருக்க. இதன் தமிழாக்கம் நாணயத்தின் வலப்புறத்திலும் ஆங்கிலவாக்கம் மாநாட்டு மண்டப சின்னத்தின் கீழும் அமைந்து காணப்படுகின்றது. ஆங்கிலச்சொல்லின் கீழ் 1976ஆம் ஆண்டு காணப்படுகின்றது. நாணயக் குத்திகளின் மறுபக்கத்தின் மத்தியில் முறையே 5, 2 என்ற எண்கள் காணப்படுகின்றன அவற்றின் பெறுமதி சொல்லில் முறையே சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் 5, 2 எண்தொகைகளுக்கு குறுக்கே காணப்படுகின்றன. "ශ්‍රී ලංකා" (இலங்கை) என்ற சொற்கள் உருவத்திற்கு மேலாக அமைந்திருக்கும்போது தமிழ், ஆங்கிலம் ஆகிய சொற்கள் முறையே இடப்புறத்திலும் வலப்புறத்திலும் காணப்படுகின்றன.

இந்த இரண்டு நாணயக்குத்திகளும் எந்த அளவு தொகைக்கும் கொடுப்பனவு செய்வதற்கான சட்ட அடிப்படையில் செலுத்துவனவாக விளங்குவதுடன் அவை சுற்றோட்டத்திலிருக்கும்போது இலங்கை மத்திய வங்கியின் பொறுப்புக்களாகவும் இருக்கும்.

**வங்கிப்பற்று வரிகள் :**

மத்திய வங்கியே தொடர்ந்தும் வங்கிகளின் பற்றுவரிச் சேர்ப்பனவிற்குப் பொறுப்பாக இருந்தது.

**கட்டாய சேமிப்புக்கள் :**

1971ஆம் ஆண்டின் கட்டாய சேமிப்புச் சட்டம் எண் 6 இன்படி திரட்டப்பட்ட கட்டாய சேமிப்பு நிதியின் பணங்களும் 1972ஆம் ஆண்டின் வருமான கட்டாய சேமிப்பு மீதான உச்சவரம்புச் சட்ட எண் 15 இன்படி திரட்டப்பட்ட பணங்களுக்கும் மத்திய வங்கி தொடர்ந்தும் பாதுகாவலராக விளங்கியதுடன் கட்டாய சேமிப்பு நிதியையும் அரசின் சார்பில் நிர்வகிக்கிறது. இந்த ஆண்டில் வங்கி 16,300 விண்ணப்பங்களைப்பெற்று ரூ. 238 இலட்சத்தை உதவுநர்களுக்கு வழங்கியது.

**ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் :**

மத்திய வங்கி ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தில் பங்குபற்றும் ஒரு வங்கி யாக் விளங்குகிறது. பங்குபற்றிய வங்கிகளுக்கு ஆசியத்தீர்ப்பனவு ஒன்றியத் தினூடாக கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவாக இலங்கையால் கொடுக் கப்பட்ட தேறிய தொகை ரூ. 1,62,808,000 ஆகும்.

**வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டம்:**

அரசின் சார்பில் மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணிச் சான் றிதழ் திட்டத்தினைத் தொடர்ந்தும் நிர்வகித்து வந்தது.

**வருமானமும் செலவீடும் :**

மத்திய வங்கியின் இவ்வாண்டு வருமானம் ரூ. 1,51,621,000 ஆகும். ஒதுக்குகளுக்கு வழங்கிய பங்குகள் உட்பட வங்கிக் காணி, கட்டிடம், அலு வலகத் தளபாடங்கள் ஆகியவற்றின் பெறுமானத் தேய்விற்காக ஒதுக்கப்பட்ட வற்றையும் உள்ளடக்கிய செலவீடு ரூ. 1,51,621,000 ஆக விளங்கியது.

**வங்கி மேற்பார்வை**

1976ஆம் ஆண்டில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம், நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 29 (1)இன்கீழ் எட்டு வர்த்தக வங்கிகளின் மேலாய்வினைத் தொடங்கி, அவற்றில் ஆறின் மேலாய்வினை முடித்தது. மேலும், 1976இல், முன்னர் மேலாய்வு செய்யப்பட்ட 3 ஏனைய வங்கிகளது அறிக்கைகளும் வெளி யிடப்பட்டன.

1975ஆம் ஆண்டின் 32 எண்கொண்ட சட்டத்தினால் திருத்தப்பட்ட 1970ஆம் ஆண்டின் 27ஆம் எண்கொண்ட வங்கிப் பற்றுவரிச் சட்டத்தின் நிர்வாகத்துடன் தொடர்பான கடமைகளைத் திணைக்களம் தொடர்ந்து ஆற்றி வந்ததுடன், ஒப்புதலளிக்கப்பட்ட அலுவலரின் சான்றிதழ்களில் கொடுப் பதற்கு தேவையான செய்திகளைச் சரிபார்க்கும் நோக்குடன் சட்டவிதியின் 15ஆம் பிரிவின்கீழ் வர்த்தக வங்கிகளின் மேலாய்வுகளையும் செய்துவந்தது.

**அபிவிருத்தி நிதித்திணைக்களம்**

மத்திய வங்கியின் நடுத்தர நீண்டதவணைக்கொடுகடன் நிதியிலிருந்து மீள நிதியைப் பெறும் ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் நிலையங்களின் வெவ் வேறு அபிவிருத்திச் செயல்திட்டங்களையும் அபிவிருத்தி நிதித்திணைக்களம் தொடர்ந்தும் மதிப்பீடு செய்கின்றது.

1976ஆம் ஆண்டில், ஒப்புதலளிக்கப்பட்ட மீளநிதியிடல், நோக்கங்களின்படி பின்வருமாறு பாகுபடுத்தப்பட்டுள்ளது :

| | | |
|---|---|---|
| கைத்தொழில் செயல்திட்டங்கள் | ... ... | ரூ. 73 இலட்சம் |
| உணவகத் திட்டங்கள் | ... ... ... | ரூ. 89 இலட்சம் |
| தேயிலைத் தொழிற்சாலைப் புத்தாக்க செயல்திட்டங்கள் | | ரூ. 17 இலட்சம் |
| மொத்தம் | ... ... | ரூ. 179 இலட்சம் |

தேயிலைத் தொழிற்சாலைப் புத்தாக்கத்திற்கான ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் முடிவுற்றபோதும், மத்திய வங்கியின் துணை ஆளுநர் தலைமைதாங்கும் கடன் குழுவே இக்கடன் திட்டத்தை நிர்வகிக்கின்றது. இக்குழுவே தொடர்ந்தும் இலகுவாகக் கிடைக்கும் வெளிநாட்டுச் செலாவணியிலிருந்து நிதியிடப்படும் தேயிலைத் தொழிற்சாலைப் புத்தாக்கத் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கும் ஆணையுரிமைகொண்ட குழுவாகத் தொழிற்படுகின்றது. இச்செயல்திட்டங்கள் தொடர்ந்தும் அபிவிருத்தி நிதித்திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

இத்திணைக்களம் கடற்றொழில் அபிவிருத்தித்திட்டத்தை நடாத்தும் கடன் குழுவையும் மேற்பார்வை செய்கின்றது. இத்திட்டத்தின் வெளிநாட்டுச் செலாவணிச் செலவுகள் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கிடைக்கப்பெறும் கடன் ஒன்றால் நிதியிடப்படுகின்றது. இத்திட்டத்தை செயற்படுத்துதல் தொடர்பான இத்திணைக்களத்தின் பொறுப்புக்கள் வள்ளங்கள் அமைக்கும் செயல்திட்டத்திற்கு ஏற்ப செயற்படுத்தும் வங்கிகளின் தொழிற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல், கடன் விண்ணப்பங்களைச் சரியான முறையில் தரப்படுதற்கான செயல்முறைகளைத் தயாரித்தல், நிறைவேற்றும் வங்கிகள் கடனைத் திரும்பப்பெறும் முறையை எடுத்துக்காட்டுதல் போன்றனவாகும், இச்செயல்திட்டம் கடற்றொழில் திணைக்களத்தின் தனிக்குறிப்பீடுகளின் அடிப்படையில் உள்நாட்டில் 28 அடி கொண்ட மீன்பிடி வள்ளங்களையும், வெளிநாட்டில் 38 அடி கொண்ட வள்ளங்களையும் அமைப்பதற்கு இடமளிக்கின்றது. முதற்குறிப்பிட்ட வள்ளங்கள் கரையிலிருந்து ஏறக்குறைய 15 கட்டைகள் வரை செல்வதற்கு மட்டுப்படுத்தியிருக்கையில், பின்குறிப்பிடப்பட்ட வள்ளங்கள் கடலில் மூன்று நாட்கள்வரை தங்குவதற்கும், ஊழியர்கள் இரவில் தங்கவும், மீனைக் களஞ்சியப்படுத்துவதற்குமான வசதிகளுடன் வகுக்கப்பட்டுள்ளது. இச்செயல்திட்டம், வள்ளங்களைத் திருத்திப் பாதுகாக்கவும் திருத்தும் வேலைத்தளங்களை நிறுவுவதற்கும், சந்தைப்படுத்தும் தேவைகளுக்காக குளிரூட்டப்பட்ட உந்துவண்டிகளை வழங்குவதற்கும் இடமளிக்கின்றது. 1976 ஓகத்து தொடக்கம் இச்செயல் திட்டத்தின் கீழ் வள்ளங்கள் வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட வெவ்வேறு வள்ளங்களின் எண்ணிக்கை கீழ் தரப்பட்டுள்ளது :

| வள்ளங்களின் வகை | இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட வேண்டிய வள்ளங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட வள்ளங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 28 அடி | 200 | 37 |
| 38 அடி | 30 | 3 |

ஏற்றுமதிக் கொடுகடன் உத்தரவாதத்திட்டம் தொழிற்படுத்துவதற்கான சட்டங்களும், வழிமுறைகளும் இத்திணைக்களத்தினாலேயே முடிவுசெய்யப்பட்டன. வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டத்திற்கும் அல்லது / மாற்றத்தக்க ரூபா கணக்கிற்குத் தகுதியுடைய வழமையாக ஏற்றுமதி செய்யப்படாத பொருட்களை ஏற்றுமதி செய்யும் ஏற்றுமதியாளர்களுக்கு வங்கிகள் கொடுகடன் வழங்குவதற்கு வசதிப்படுத்துவதன்மூலம் ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதே இச்செயல்திட்டத்தின் குறிக்கோளாகும். ஏதாவது உத்தரவாத முற்பணத்தினால் ஒரு வர்த்தக வங்கிக்கு நட்டம் ஏற்படுமிடத்து இரண்டில் ஒரு பங்கைத் தாங்குவதற்கு இத்திட்டம் இடமளிக்கின்றது.

வேளாண்மை அபிவிருத்திக்காக பொதுமக்களுக்கும் தனியார் துறைகளுக்கும் தேவைப்படும் இழுபொறிகளையும், இழுபொறிப் பாகங்களையும் ஏனைய கருவிகளையும் கொள்வனவு செய்யும்பொருட்டு பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பால் வழங்கப்பட்ட 210 இலட்சம் ஐ அ. டொலர்கள் தொகைகொண்ட கொடுகடன் தொகுதியை ஈர்த்துக்கொள்வதற்கு வசதிப்படுத்தும் நோக்குடன் அமைக்கப்பட்ட செயல்திட்ட ஒருங்கிணைக் குழுவின் உறுப்பினராக அபிவிருத்தி நிதி பணிப்பாளர் தொடர்ந்தும் கடமையாற்றுகின்றார்.

# ஊ. சே. நி. திணைக்களத்தினது தொழிற்பாடுகள் பற்றிய மீளாய்வு

## 00. முகவுரை

இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமநிதித் திணைக்களமானது, 1958 ஒகத்து 1ஆம் திகதி, 1958இன் ஊழியர் சேமநிதிச் சட்ட எண் 15 இன்படி நிறுவப்பட்டது. இச்சட்டமானது, தனியார் துறையிலும், அரசுசார் துறையிலுமுள்ள ஊழியர்களுக்கான சேமநிதியத்தினை நிறுவ வகைசெய்தது. இந்நிதியத்திற்குப் பின்வரும் பொறுப்புக்கள் அளிக்கப்பட்டன. நிதியத்திற்குரிய உதவு தொகைகளைப் பெறுதல், நிதியத்தில் பதிவுசெய்யப்பட்ட தொழில் முயற்சியாளர்களினதும், தனிப்பட்ட உறுப்பினர்களினதும் கணக்குகளைச் சரியான முறையில் பேணுதல், உதவுதொகைகளின் நிதியினை மீளக் கொடுத்தல், நிதியத்தின் பணத்தினை முதலீடு செய்தல் போன்றவையாகும். இத்திணைக்களம் இச்சட்டத்தினை நிருவாகம் செய்து நடைமுறைப்படுத்தும் தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமநிதிப் பிரிவுடன் ஒருங்கிணைந்து செயற்படுகின்றது.

கீழே இணைக்கப்பட்டுள்ள அட்டவணையானது 1971-1976க்குரிய காலத்தில் இந்நிதியத்தின் தொழிற்பாடுகளினது ஓர் ஒப்பீட்டுக் குறிப்பினைக் காட்டுகின்றது.

## 01. உறுப்புரிமையும் அடக்கியுள்ள தொழில்களும்

1966/75க்குரிய பத்து ஆண்டு காலப்பகுதியில் இந்நிதியத்தின் உறுப்புரிமை 15,43,151இல் இருந்து 22,91,0222ஆக அதிகரித்துள்ளது. அதாவது சராசரியாக ஆண்டொன்றிற்கு ஏறக்குறைய 4.8 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. 1971இல் ஊ. சே. நி. திருத்தச் சட்டத்தின் விளைவாக இது, தனி ஊழியன் ஒருவனையும் உள்ளடக்கும். (வீட்டு வேலைக்காரர், சமய, அற அமைப்புக்கள் தவிர) எல்லாத் தொழில்களையும் அடக்கக்கூடியதாக விரிவுபடுத்தப்பட்டது. இதன் உறுப்புரிமையானது முன்னைய ஆண்டின் 4சதவீத அதிகரிப்பிற்கு மாறாக 7 சதவீதத்தால் உயர்வுற்றது. இதன்பின் ஆண்டுக்குரிய உறுப்புரிமை அதிகரிப்பு வீதமானது குறைந்து செல்லும் போக்கினைக் காட்டுகின்றது. 1975இல் உறுப்புரிமையில் (ஏறக்குறைய) 3.8 சதவீத அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டது.

1971 இல் உள்ளடக்கப்பட்ட தொழில்களின் எண்ணிக்கையில் 47.9 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டிருக்கையில், 1971-75க்குரிய ஐந்து ஆண்டுக் காலத்தில் இவற்றின் எண்ணிக்கை 34,253இலிருந்து 46,539ஆக அதிகரித்தது. இது சராசரியாக ஆண்டொன்றிற்கு ஏறக்குறைய 7.2 சதவீத அதிகரிப்பாகும். 1975இல் உள்ளடக்கப்பட்ட தொழில்களின் எண்ணிக்கையில் (ஏறக்குறைய) 5.2 சதவீதம் கொண்ட அதிகரிப்பு ஏற்பட்டது.

## 02. உதவுதொகைகள்

தொடக்கத்தில் நிதியத்திற்கான உதவுதொகையானது ஊழியரின் உழைப்பிலிருந்து 4 சதவீதமெனவும், தொழில் தருநரின் உதவுதொகை 6சதவீதமெனவும் நிர்ணயிக்கப்பட்டது. 1971இல் சட்டத்தின் கீழ், உள்ளடக்கமானது எல்லாத் தொழில்களையும் அடக்கக்கூடியதாக (வீட்டுப்பணியாளர் தவிர்ந்த) விரிவுபடுத்தப்பட்ட பொழுது, இவ்வீதங்கள் முறையே 6சதவீதமாகவும், 9சதவீதமாகவும் உயர்த்தப்பட்டன. இதன் விளைவாக இந்நிதிக்குரிய உதவுதொகைகளில் கணிசமானளவு அதிகரிப்பு ஏற்பட்டது. (ஏறக்குறைய ரூ. 490 இலட்சம்)

## ஊ. சே. நி. புள்ளி விபரங்கள் 1971/1976

| | 1971 | 1972 | 1973 | 1974 | 1975 | 1976 |
|---|---|---|---|---|---|---|
| 1. உள்ளடக்குகின்ற தொழில்களின் எண்ணிக்கை | 34,253 | 38,488 | 41,700 | 44,219 | 46,539 | வி. கி. |
| 2. தனிப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | 1,954,606 | 2,074,404 | 2,151,189 | 2,208,313 | 2,291,022 | வி. கி. |
| 3. கிடைக்கப்பெற்ற உதவு தொகைகள் (ரூபாயில்) | 147.761.877 | 162,269,880 | 173.079.894 | 189,843,449 | 215.982.970 | 237,306,270.32 |
| 4. முதலீடுகள் (ரூபாயில்) | 194,904,374 | 165,910,882 | 204,196,991 | 200,240,100 | 262,186,000 | 291,762,200.00 |
| 5. முதலீடுகளிலிருந்து வருமானம் (ரூபாயில்) | 48,211,434 | 63,658,748 | 80,089,666 | 96,994,949 | 117,043,162 | 132,603,366.41 |
| 6. மீளச்செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் (ரூபாயில்) | 41,064,044 | 54,247,068 | 70,361,065 | 89,140,538 | 87,516,793 | 104,395,006.72 |
| 7. மீளச்செலுத்துகைகளின் எண்ணிக்கை | 45,956 | 52,432 | 57,740 | 59,955* | 52,780 | 58,993 |
| 8. வட்டி வீதம் (%) | 5 | 5 | 5½ | 6 | 6 | 6 |
| 9. உறுப்பினர்களின் நிலுவைகளின்மீது வட்டி (ரூபாயில்) | 42,737,866 | 57,063,525 | 72,371,678 | 90,583,183 | 104,965,041 | 120,906,675.72 |

* உள்ளடக்கப்படாத 9,874 பகுதிக் கொடுப்பனவுகள் 1975 க்கான அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நிதியத்துக்குப் பெறப்பட்ட உதவுதொகைகள் 1959ல் அதாவது, தொழிற்படத் தொடங்கிய முதலாவது ஆண்டின் ஏறக்குறைய ரூ. 120 இலட்சத்திலிருந்து 1976இல் ரூ.2370 இலட்சமாக அதிகரித்தது. 1970ம் ஆண்டைவிட 1971ல் உதவுதொகைகளில் 48.9 சதவீத அதிகரிப்பேற்பட்ட வேளையில் 1971-1976 காலப்பகுதியில் நிதியத்துக்கான உதவுதொகைகள் ரூ. 1480 இலட்சத்திலிருந்து ரூ. 2370 இலட்சமாக அதாவது ஆண்டொன்றுக்குச் சராசரியாக ஏறக்குறைய 10.0 சதவீதத்தால் அதிகரித்தது. 1976இல் ஏறக்குறைய 9.7 சதவீத அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டது.

## 03. முதலீடுகள்

ஊழியர்சேமநிதித் திணைக்களம் அதன் தொடக்கத்திலிருந்து மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினுல் திரட்டப்பட்ட கடன்களுக்கு முக்கிய உதவுநராயிருந்து வந்துள்ளது. 1959இல் அதாவது தொழிற்பாட்டின் முதலாவது ஆண்டில் அரச பிணைகளில் இதன் முதலீடுகள் ரூ. 90 இலட்சமாக விளங்கிய வேளையில் 1976ல் செய்யப்பட்ட முதலீடுகள் ரூ. 2920 இலட்சமாக விளங்கின. 1970ஆம் ஆண்டைவிட 1971இல் முதலீடுகள் 93.1 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் 1971-1976 காலப் பகுதியில் முதலீடுகள் ரூ. 1950 இலட்சத்திலிருந்து ரூ.2920 இலட்சமாக அதாவது ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 8.3 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. 1976இல் பதிவுசெய்யப்பட்ட அதிகரிப்பு ஏறக்குறைய 11.5 சதவீதமாகும்.

## 04. மீளளிப்புக்கள்

1959இல் நிதிய உறுப்பினர்களுக்கான மீளளிப்புக்கள் வாயிலாக ஏறக்குறைய ரூ. 9 இலட்சத்தைச் செலுத்தியது. இக் கணக்கில் நிதியத்தின் பொறுப்பு ஆண்டுதோறும் அதிகரித்தது. 1971-1976 காலப்பகுதியில் மீளளிப்புக்கள் ரூ. 410 இலட்சத்திலிருந்து ரூ. 1040 இலட்சமாக அதாவது ஆண்டொன்றுக்குச் சராசரியாக ஏறக்குறைய 25.6 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. ஆனுல் செயற்படுத்தப்பட்ட மீளளிப்புகளின் எண்ணிக்கை 1971இன் 45,956இலிருந்து 1974இல் 59,955ஆகி அதாவது ஆண்டொன்றுக்குச் சராசரியாக ஏறக்குறைய 7.6 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. அடுத்து செயற்படுத்தப்பட்ட மீளளிப்புகளின் எண்ணிக்கை 1975இல் 52,780ஆக 12 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்ததுடன் 1976இல் ஏறக்குறைய 11.7 சதவீதத்தால் 58,993ஆக அதிகரித்தது. 1971-1976 காலப்பகுதியில் ஆண்டுக்குரிய சராசரி அதிகரிப்பு ஏறக்குறைய 4.7 சதவீதமாயிருந்தது. இது மீளளிப்பொன்றுக்குச் சராசரியாகச் செலுத்தப்பட்ட தொகை, இக்காலப்பகுதியில் ஏறக்குறைய ரூ. 891இலிருந்து ரூ. 1762ஆக அதிகரித்ததைக் காட்டுகிறது.

கடந்த ஆண்டு மீளாய்வில் 1974இல் செயற்படுத்தப்பட்ட மீளளிப்புக்களின் எண்ணிக்கை 69,829எனக் கொடுக்கப்பட்டிருப்பது மீளளிப்புக்களின் பகுதிக்கொடுப்பனவுகளையும் உள்ளடக்குகின்றதென்பது கவனிக்கத்தக்கது. இவ்வெண்தொகையானது இணைக்கப்பட்ட அட்டவணையில் உள்ளபடி 59,955 ஆகச் சீராக்கம் செய்யப்பட்டது.

## 05. உறுப்பினர் உதவுதொகைகளின் மீதான வட்டி

நிதியத்திலுள்ள பணத்தின் முதலீடுகளிலிருந்தான வருவாயிலிருந்து உறுப்பினர்களின் நிலுவைகள் மீதான வட்டியைச் செலுத்தும்படி ஊழியர் சேமநிதித்திணைக்களம் வேண்டப்பட்டது. இவ்வீதம் ஊ. சே. நி. சட்டத்தினுல் தொடக்கத்தில் ஆகக்குறைந்தது 2½ சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டது. உண்மையான வட்டிவீதம் படிப்படியாக அதிகரித்து 1974இன் இறுதியில் 6 சதவீதமாகியது.